


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 75 கோடியே 80 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 200 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், 8 காவல்துறை இதர கட்டடங்கள், ரூ.15 கோடி செலவில் 22 காவல் பயிற்சி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள திறன்மிகு வகுப்பறைகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், காவல்துறை தலைமை இயக்குநர் பயிற்சி முனைவர் சந்தீப் ராய் ராத்தோர், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வினித் தேவ் வான்கேடே, சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு சென்னை சோழிங்கநல்லூர், அம்பத்தூர் மற்றும் மகாகவி பாரதியார் நகர் ஆகிய இடங்களிலுள்ள 2,138 அடுக்குமாடி குடியிருப்புகளை காவலர்களுக்கு வாடகை குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், காவல்துறை தலைமை இயக்குநர் பயிற்சி முனைவர் சந்தீப் ராய் ராத்தோர் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வினித் தேவ் வான்கேடே, சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடி சிப்காட்டில்

# ரூ.5300 கோடியில் எம்.ஆர்.எப். டயர் உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை, மார்ச் 5 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (4.03.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், MRF நிறுவனம், 5**300 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 1000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்பு** அளிக்கும் வகையில், சிவகங்கை மாவட்டம், சிப்காட் - இலுப்பைக்குடி தொழிற் பூங்காவில் புதிய டயர் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026- யை வெளியிட்டார்.

தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. சீரான, பரவலான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதை நோக்கமாகக்கொண்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்தியாவிலேயே, இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாகவும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

**MRF நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

MRF நிறுவனம், டயர்கள், டியூப்கள் மற்றும் பாதுகாப்புப் பட்டைகள் (Flaps) ஆகியவற்றைத் தயாரித்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் விநியோகம் செய்து வரும் பாரம்பரியம் மிக்க நிறுவனமாகும். இந்நிறுவனம், இந்தியாவில் 10 இடங்களில் தனது ஆலைகளை நிறுவியிருந்தாலும், தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில், அதாவது திருவொற்றியூர், அரக்கோணம் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தனது உற்பத்தி ஆலைகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது

MRF நிறுவனம், தனது வணிகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில், அடுத்த 12 ஆண்டுகளில், 5300 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 1000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிவகங்கை மாவட்டம், சிப்காட் இலுப்பைக்குடி தொழிற் பூங்காவில் ஒரு புதிய அதிநவீன டயர் உற்பத்தி ஆலை அமைக்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

**தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026 வெளியீடு**

தமிழ்நாட்டை நிலைத்த மற்றும் தொழிற்நுட்ப ரீதியாக மேம்பட்ட கப்பல் கட்டுமானத்தில் உலகளவில் முன்னணி மாநிலமாக நிலைநிறுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026 வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் வெளியிடப்பட்டது.

கப்பல் கட்டுமானம், வடிவமைப்பு, பழுது பார்த்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, திறன் மேம்பாடு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் முழுமையான கடல்சார் தொழில் சூழலை உருவாக்குவது இக்கொள்கையின் பிரதான நோக்கமாகும்.

கப்பல் கட்டுமானத் தளம் (Shipyard), பசுமை கப்பல் மறுசுழற்சி (Green Ship Recycling) மற்றும் கப்பல் உதிரிபாகங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் (Marine Component Manufacturing) முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், இக்கொள்கை விரிவான ஊக்குவிப்பு கட்டமைப்பை வழங்குகிறது. முதலீட்டில் பங்களிப்பு (equity participation), சொத்து குத்தகை (asset leasing), மூலதன மானியம் (Capital Subsidy) மற்றும் உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகைகள் (Productionlinked Incentives) ஆகியவற்றைக் கொண்ட அமைப்புமுறையிலான ஊக்கத் தொகுப்பு (Structured Package of Assistance) வழங்கப்படும். மேலும், சர்வதேச சுற்றுச்சூழல் ஒப்பந்தங்களுக்கு இணங்கச் செயல்படும் சான்றளிக்கப்பட்ட மறுசுழற்சி நிலையங்களுக்கு மூலதன மானியம் வழங்கப்படும். கப்பல் உபபாகங்கள் உற்பத்தித் துறைக்கு, வளர்ந்துவரும் துறைக்கான (Sunrise Sector) சிறப்பு அங்கீகாரம் வழங்கி, தமிழ்நாடு தொழில் கொள்கை 2021ன்கீழ் ஊக்கச்சலுகைகள் வழங்கப்படும்.

SIPCOT மற்றும் வ.ஊ.சி துறைமுகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து, NSHIPTN என்ற சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) அமைத்தல், ஒற்றைச் சாளர இணையதளம் மூலம் அனுமதி (singlewindow project facilitation) மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்துடன் (Indian Maritime University IMU) ஒருங்கிணைந்து இத்துறைக்குத் தேவையான சிறப்பு படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs), பல்தொழிற்நுட்ப கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மாநில பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்புடன் பல்நிலை திறன் மேம்பாட்டு அமைப்பு போன்ற நிறுவன ஆதரவுகள் மூலம் இத்துறை வலுப்படுத்தப்படும். இதன்மூலம் உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாகி, கடற்கரைப் பகுதிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டு, நீல பொருளாதாரத்தில் உலகளவில் முன்னணி மையமாக தமிழ்நாடு உருவெடுக்கும் வகையில் இந்த தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026 வெளியிடப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்களும், MRF நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.எம். மாம்மன், துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அருண் மாம்மன், மேலாண்மை இயக்குநர் ராகுல் மாம்மன் மாப்பிள்ளை, துணைத் தலைவர் மற்றும் இணை நிறுவன செயலர் டி.வி. துளசிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. – சி.என்.அண்ணாதுரை எம்.பி. பங்கேற்பு!

# செஞ்சியில் ரூ.85 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க திட்டப் பணி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

செஞ்சி, மார்ச் 5 –

விழுப்புரம் மாவட்டம்நெடுஞ்சாலைத் துறை சார்பில் முதல மைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆற்காடு விழுப்புரம் சாலையில் 79 / 140 முதல் 92/610 வரை கடின புருவத்துடன் கூடிய இருவழிச் சாலையில் இருந்து 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், சிறுபாலங்கள் திரும்பக் கட்டுதல், மற்றும் மையத் தடுப்புச் சுவர், மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா செஞ்சியை அடுத்த விநாயகபுரம் கூட்டு சாலையில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமை தாங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆரணி எம்.எஸ். தரணிவேந்தன், திருவண்ணாமலை அண்ணாதுரை,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உதவி கோட்ட பொறியாளர் அக்பர் அலி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நான்கு வழிச்சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு செய்து பணியை தொடங்கி வைத்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கூறுகையில்:

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றஉங்களுடன் ஸ்டா லின் அரசு விழாவில் ஆற்காடு விழுப்புரம் சாலையை அகலப்படுத்திநான்கு வழிச்சாலையாக அமைக்க வேண்டும் என முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்ததையடுத்து முதலமைச்சர் 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக அமைப்பதற்கு உத்தரவிட்டதையடுத்து இப்பணிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நான்குவழிசாலை அமைக்க உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கும், துணை முதலமைச்சருக்கும். பொதுப்பணி துறை அமைச்சருக்கும்விழுப்புரம் மாவட்டத்தின் சார்பாகவும்பொது மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைதெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் செந்தில்குமார், கோட்ட பொறியாளர் உத்தண்டி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், பச்சையப்பன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,உதவி பொறியாளர்கள் பாலாஜி, விஷ்ணு பிரியா, உள்ளிட்டஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மதுரை – நெல்லை தூத்துக்குடி தென்மண்டல

# தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

மதுரை, நெல்லை, தூத்துக்குடி தென்மண்டல தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (06.03.2026 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு, ABM Hotel & Resort, தேனியில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில், பொறியாளர் அணித் தலைவர் துரை.கி.சரவணன், பொறியாளர் அணியின் மதுரை மண்டல பொறுப்பாளர் கலை.கார்த்திகேயன், நெல்லை மண்டல பொறுப்பாளர் ராஜவர்மன், தூத்துக்குடி மண்டல பொறுப்பாளர் பா.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மதுரை, நெல்லை, தூத்துக்குடி மண்டலத்துக்கு உட்பட்ட தென் மண்டல பொறியாளர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் அவசியம் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: திருச்சியில் 09.03.2026 அன்று நடைப்பெற உள்ள கழக நிர்வாகிகள் மாநாடு வருகைக்காக.

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி, இராமேஸ்வரம் நகராட்சியில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ”தூய்மை இராமேஸ்வரம் நோக்கத்தை முன்னெடுக்கும் வகையில் 12 புதிய CNG பேருந்து சேவையை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் S. S. சிவசங்கர் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், இணைந்து கொடி அசைத்து பேருந்து சேவையை துவக்கி வைத்து, பேருந்தில் பயணம் செய்து சேவையை மக்களுக்காக தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி உட்பட மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சீத் சிங் காலோன் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், நகர்மன்றத் தலைவர், இ. நாசர் கான்,துணைத் தலைவர் பிச்சை என்ற தக்ஷிணாமூர்த்தி மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை பாளையங்கோட்டை ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி 12ஆம் வகுப்பு படித்து வரும் மாணவி ரோஸ்னி தேனியில் நடைபெற்ற மாநில அளவிலான குத்துச் சண்டை போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவி ரோஸ்னியை நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் பாராட்டி கேடயம் பரிசாக வழங்கினார். உடன் தேவேந்திரகுல வேளாளர் உறவின் முறை மாநிலத் தலைவர் வே.ச. முத்துக்குமார் உள்ளார்.